**OPEN ACCESS**

Manuscript ID: TAM-09012024-7987

Volume: 9

Issue: 1

Month: July

Year: 2024

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 26.04.2024

Accepted: 18.06.2024

Published: 01.07.2024

Citation: Kamalakkannan, E., and K. Venkatesan. "Mahendravarman Kudavara Temples in Pallavar History." *Shanlax International Journal of Tamil Research*, vol. 9, no. 1, 2024, pp. 59–64.

DOI: https://doi.org/10.34293/tamil.v9i1.7987

*Corresponding Author: davitkamal@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Mahendravarman Kudavara Temples in Pallavar History

**E. Kamalakkannan**
*Research Scholar, P.G and Research Department of Tamil*
*Aringnar Anna Government Arts College, Cheyyar*
*Thiruvalluvar University, Serkkadu, Tamil Nadu, India*
*http://orcid.org/0009-0008-2939-656x*

**K. Venkatesan**
*Associate Professor, P.G and Research Department of Tamil*
*Aringnar Anna Government Arts College Cheyyar, Tamil Nadu, India*

**Abstract**

*This article attempts to summarize the nature, appearance and unity of the Kudavarai temples that were seen in the Pallavar period and the general characteristics of the Mahendravarma Pallavar temples. Mahendravarman was the first to create a new method of temple construction which had not existed before in Tamil Nadu. That is, the method of constructing Kudaimandapam and Karpagraha on the same black stone rock is called Gudavarakoil. manifested itself in the temple system. In this, literature, excellence and painting were established. This article has been set up to document the Kudaivara temple built by Mahendravarman among the Pallava kings.*

***Keywords:*** *History of Pallava, Mahendra Varman and his Rock Cut Temples, Structure and Sculpture of Rock Cut Temples, Reconstruction of Pallava Art History through Rock Cut Temples.*

**References**

1. Mailai. Seeni. Venkatasamy, Mahendravarman, Poombukar Publishing House, 2008. P.22, 92
2. K. Meenatchi, Administration and Social Life Under Pallavas University Of Madras, 1938. P.1
3. K. R.Srinivasan, Cave Temples of Pallavas, Archaeological Survey of India,1964. p.34
4. Nedunelwada Saiva Siddhanta Literature Society, P. 3, Chennai 2003
5. Burdon Stein – History of India, Oxford University Press, 2000. P. 21

# பல்லவர் வரலாற்றில் மகேந்திரவர்மன் குடவரைக் கோயில்கள்

**இ. கமலக்கண்ணன்**
பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
முதுகலை மற்றும் தமிழாய்வுத் துறை
அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி, செய்யாறு
திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு

**முனைவர் க. வெங்கடேசன்**
இணைப் பேராசிரியர்
முதுகலை மற்றும் தமிழாய்வுத் துறை
அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி, செய்யாறு

**ஆய்வுச்சுருக்கம்**
*பல்லவர் காலத்தில் காணப்பட்ட குடவரைக் கோயில்களின் இயல்புகளையும், தோற்றங்களையும் ஒற்றுமைப் பற்றியும் மகேந்திரவர்ம பல்லவர் கோயில்களின் பொதுமைப்பண்பு பற்றியும் தொகுத்துரைக்க இக்கட்டுரை முயற்சிக்கிறது. கோயில் அமைப்பதில் தமிழ்நாட்டில் முன்பு இல்லாத புதிய முறையை மகேந்திரவர்மன் முதன்முதலாக உண்டாக்கினான். ஒரே கருங்கற் பாறையை குடைந்து மண்டபத்தையும் கற்பகிரகத்தையும் அமைக்கின்ற முறையை குடவரைக்கோயில் என்பர். கலை இலக்கிய கோயில்கள் உருவாவதற்கு சமூக பொருளாதார முன்னேற்றம், பல்லவர் காலம் தொண்டை மண்டலத்தில் ஒரு சமூக மாற்றத்திற்கான* Transition Period *காலம் என கருதலாம். ஆகவே, பல்லவர்களின் சமூக பொருளாதார மாற்றம் கோயில் அமைப்பு முறையிலும் வெளிப்பட்டது. இலக்கியம், சிற்பம், ஓவியம் ஆகியவை புத்தாக்கல் நிலைபெற்றன. பல்லவ அரசர்களில் மகேந்திரவர்மன் அமைத்த குடைவரை கோயில் குறித்து இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.*

## அறிமுகம்

பல்லவர்கள் காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு கி.பி. 6-ம் நூற்றாண்டு முதல் 9-ம் நூற்றாண்டின் முற்பகுதி வரையில் ஆட்சிபுரிந்தனர். ஆறு நூற்றாண்டுகளாகக் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு தொண்டை மண்டலத்தில் சிறப்பாட்சியை நல்கியோர் என்கிறார் கே.மீனாட்சி. (Administration and Social Life under the Pallava, P.1.)[1] இவர்களில் சிம்மவிஷ்ணு தொடங்கி அபராஜித்தன் வரையிலான பல்லவர்கால அரசர்களில் மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன் ஆகிய இவர்களது ஆட்சிக் காலத்தில் குடவரைக் கோயில்கள் மிகுதியாக எடுக்கப்பட்டன. மகேந்திரவர்மன் குடவரைக் கோயில்களின் தொடக்கம் என்கிறார் மயிலை. சீனி வேங்கடசாமி[2] (மயிலை சீனி. வேங்கடசாமி, மகேந்திரவர்மன், ப.22) குடவரைக் கோயில்கள் பாறையைக் குடைந்து உருவாக்கப்பட்டவை. இவை கற்றளி கோயில்களுக்கு முன்னோடி எனலாம். நெடுநெல்வாடை குன்று குயின்ற ஓங்குநிலை வாயில் நெடுநெல்வாடை எனும் நூலில் மலையைக் குடையும் நிகழ்வைக் காட்டியுள்ளது. ஆனால், மலையைக் குடைந்து உருவாக்கப்பட்ட குறிப்புகள் சங்க இலக்கியத்தில் இல்லை. பல்லவர்களே தொண்டைமண்டல பகுதியில் இவ்வகையான குடவரைகலை முன்னெடுத்தனர் என்கிறார்[3]

கே.சீனிவாசன் (K.Srinivasan, Cave temple of Pallavas, preface)

## தொண்டை மண்டலமும், பல்லவர்களும்

தொண்டை மண்டலம் என்னும் நிலப்பரப்பு ஆந்திரா தொடங்கி திருச்சி வரையிலான நிலப்பகுதியைக் குறித்தது எனலாம். முத்தரையர்கள், கங்காளர்கள், முற்கால, பிற்கால சோழர்கள், நாயக்கர்கள் அனைவரும் குடவரைக்கோவிலில் பல்லவர் மரபை ஏதேனும் ஒருவழியில் பின்பற்றியுள்ளனர். சிம்மவிஷ்ணுவின் காலத்தில் சோழர்களை வென்றுப் பல்லவ நாட்டுடன் இணைக்கப்பட்டது. காஞ்சி பல்லவர்களில் சிம்மவிஷ்ணுவின் மகனான மகேந்திரவர்மன் அவரது மகன் நரசிம்மவர்மனும் முதன்மையான சமூகப் பொருளாதார கலைப்பணிகளை தொண்டை மண்டலத்தில் நிகழ்த்தினர் என்கிறார் கே.மீனாட்சி. வடதமிழகம் நிலவியல்படி பல மலைகளையும், குன்றுகலையும் உட்கொண்ட பகுதி. இதனால் வடதமிழகத்தில் சமச்சீரற்ற வளர்ச்சி (Sediment Development) நடைபெற்றதாக பர்டன் ஸ்டெயின் குறிக்கிறார் (Burdon Stien & History of India. P.21) வடதமிழகம் மலைகள் நிறைந்த பகுதி என்பதால் குடவரைகோயில்களில் மிக எளிதாக உருவாக்கினர்.

## பல்லவர் கால பொருளாதார மறுமலர்ச்சி

பல்லவர் காலத்தை வட தமிழகத்தின் பொருளாதார கலை மறுமலர்ச்சிக்காலம் என வரையறுக்கலாம். குறிப்பாக மகேந்திரவர்மன் காலத்திய பொருளாதார செயல்பாடுகள் தமிழகத்தில் நிலமானிய சமூக அமைப்பு உருவாகக் காரணமாக அமைந்தது. மகேந்திரவர்மன் தன் காலத்திய நீர்மேலாண்மைக்கு முதன்மையான செயல்பாடுகளை மேற்கொண்டுள்ளான். மாமண்டூரில் இரண்டு பருண்மையான செயல்கள் நடப்பிக்கப்பெற்றன. ஒன்று பாலாற்றின் படுக்கை ஒட்டி எடுக்கப் பெற்ற மாமண்டூர் ஏரி, இதற்குச் சித்திர மேகத்தடாகம் என்று மகேந்திரவர்மன் காலத்தில் பெயர் சூட்டப்பட்டுள்ளது. மகேந்திரவாடி ஏரி. இதனைப்போன்றே உத்திரமேரூர் ஏரிக்கு தங்கமேடத்தடாகம் என்றும் பெயரிட்டுள்ளார்கள் என்கிறார் மா.ராசமாணிக்கனார்.

பாலாற்றின் தொடக்கம் முதற்கொண்டு கடலூர் வரை பல இதில் குறிக்கத்தக்க ஒன்று. இவ்வாறே செய்யாறும் பல ஏரிகளோடு இணைக்கப்பட்டது. இத்தகைய நீர் மேலாண்மைச் செயல்பாடுகளால் பல்லவர்கள் முன்பிருந்த வறண்ட நிலப் பொருளாதாரத்தைப் (Dry Land Economy) (Wet Land Economy) பாசன நிலப் பொருளாதாரமாக மாற்றினர் (Gabriel Jouveau & Dubrauil the Pallavas, P.68).

பர்டன் ஸ்டெயின் கருத்துப்படி காவிரி படுக்கையில் விளைந்த விவசாயத்தைவிட பன்மடங்கு மிகுதியான விவசாய சாகுபடிகளை தொண்டைமண்டலம் உற்பத்தி செய்ய பல்லவ அரசு முன்னின்றது. இதனால் உருவான அரசு உபரி அடுத்த பேரரசுகளுக்குப் பொருளாதார ஆதாரங்களாக மாறின எனலாம். கலை இலக்கியங்கள் பொருளாதார அடித்தளத்தைக் கொண்டே உருவாகுபவை. அவ்வகையில் பல்லவர் கால புதிய பொருளாதார போக்கு சமயத்தில் மறுமலர்ச்சியையும், கோயில்களில் குடவரைக் கோயில் என்னும் புதிய ஆவணமாக வகைமையையும் உற்பத்தி செய்தது. அதுவரை சமண மடங்களில் ஆதிக்கத்தில் இருந்த தொண்டை மண்டல விவசாயப் பகுதிகள் சைவ வட்டத்திற்குள் வரத் தலைப்பட்ட காலமாக பல்லவர்கள் காலத்தை அனுக்கிறார் கே.மீனாட்சி. ஆகவே, பலகுடவரைகள் சைவ வைணவ மதங்களுக்கு உரியவையாக காணப்படுகின்றன.

**குடவரைக் கோயில் அமைவிடங்களும் வரலாற்றுச் சிறப்பும்**

மகேந்திரவர்மனால் உருவாக்கப்பட்ட பதினைந்து குடவரைக் கோயில்களின் திருச்சிராப்பள்ளி, மண்டகப்பட்டு, தளவானூர், மகேந்திரவாடி, மாமண்டூர், மேலச்சேரி, குரங்கனில் முட்டும், சிங்காவரம், திருக்கழுக்குண்றம், திருக்கோகர்ணம், மாமல்லபுரம், பல்லாவரம், வல்லம் ஆகிய பதினைந்து கோயில்களும் மகேந்திரவர்மனால் உருவாக்கப்பட்ட கோயில்கள் ஆகும். சில இடங்களில் அமைந்துள்ள கோயில்கள் முற்றுபெறாமல் காணப்படுவதற்கான காரணம் பாறையின் உறுதியற்ற தன்மை, அரசியல் ஸ்திரத்தன்மை காரணமாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

மகேந்திரவர்மன் தன் ஆட்சிக் காலத்தில் பதினைந்து குடவரைக் கோயில்களை அமைத்துள்ளான் என்று குறிப்பிடுகிறார் மயிலை சீனி.வேங்கடசாமி. இவற்றுள் திருமாலுக்கு மூன்றும் சிவனுக்கு ஆறும், மும்மூர்த்திகளுக்கு இரண்டும், கொற்றவைக்கு ஒன்றும், அருகக் கடவுளுக்கு ஒன்றும், ஏழு மும்மூர்த்திகளுக்கும் இரண்டும், மகேந்திரவர்மன் காலத்துக் கோயில்கள் பின்வரும் பொதுமைப் பண்புகளையும் பல்லவர்காலம் சார்ந்ததாகவம் கண்டறியப்பட்டுள்ளன.

குடவரைக் கோயில்கள் பல பல்லவ அரசர்களின் சிறப்புகளை எடுத்துரைக்கின்றன. குறிப்பாக மாமண்டூர் செங்கல்பட்டு வல்லம் குடவரைக்கோயிலில் மகேந்திரவர்மனின் சிறப்புப் பட்டப் பெயர்களைப் பகாபிடுகு, லிலிதரன், சத்ருமல்லன், குணபரன் ஆகிய பெயர்கள் குறிக்கப்பெற்றுள்ள இவை பல்லவ வரலாற்றுச் சாசனங்களாக அமைந்துள்ள முறைமையைச் சுட்டிக்காட்டுகின்றன.

**குடவரைக் கோயில்களின் பொதுமைப் பண்பு**

குடவரைக் கோயில்கள் எந்தவிதமான ஆகம விதிகளின் படியும் கட்டப்பெறவில்லை. இக்காரணங்களினாலேயே ஆழ்வார்களும், நாயன்மார்களும் குடவரைக் கோயில்களைப் பாடவில்லை. ஒவ்வொரு கோயிலில் உள்ள வாயிலிலும், வாயில்காப்போன், துவாரபாலகர்கள் காணப்படுகின்றன. சில குடவரைக் கோயில்களின் அமைப்பு ஒன்றாகவே காணப்படுகிறது. குடவரைக்கோயில்கள் பெரும்பாலும் ஏரிகளுக்குப் பக்கத்தில் உள்ள மலைகளைக் குடைந்து உருவாக்கப்பட்டுள்ளன. இதற்குச் சான்றாக மாமண்டூர் குடவரைக் கோயில்கள். ஏரி அமைப்புப் பணிகளுக்கு பின்னர் அல்லது விரிவாக்கத்திற்குப் பின்னர் இத்தகைய குடவரைக்கோயில்கள் அதனைத் தெரிவிக்கும் ஆவணமாக்கத்திற்காக உருவாக்கப்பட்டிருக்கலாம் என்பது ஒரு விவாத்திற்கான குறிப்பாக அமைகிறது.

மகேந்திரவர்மன் காலத்திய குடவரைக் கோயில்களுக்கும், மாமல்லனின் குடவரைக் கோயிலும், குறிக்கத்தக்க வேறுபாடுகள் உள்ளன. குறிப்பாக வல்லம் குடவரைக் கோயில் 3, மாமல்லபுரம் வராக மண்டபம், மகிடாசூர மர்த்தினி மண்டபம், திருமூர்த்தி மண்டபம் ஆகிய இம்மூன்றும் தனித்த அடையாளங்களோடு காணப்படுகின்றன. என்கிறார். பல்லவர்காலத்தை இலக்கிய சான்றுகளோடு எழுதிய மா.இராசமாணிக்கனார்.

**மகேந்திரவர்மனின் குடவரைக் கோயில்களின் பொதுமைப் பண்பு**

மகேந்திரவர்மன் காலத்துக் குடவரைக் கோயில்களில் உள்ள சிற்ப வேலைப்பாடுகள் பின்வரும் பொதுமைப்பண்புகள் அடிப்படையில் உள்ளன.

குடைவரைக் கோயிலின் மண்டபத்தைத் தாங்கியுள்ள தூண்கள், மேற்பகுதி, நடுப்பகுதி, அடிப்பகுதி என்று மூன்று பகுதிகளாக பிரிக்கப்பட்டு மேற்பகுதியும் அடிப்பகுதியும் நான்கு பக்கமுள்ள சதுரமாகவும் நடுப்பகுதி எட்டுபட்டையாகவும் இருக்கும். சில குடவரைத் தூண்களின் சதுரப்பகுதியில் தாமரைப் பூவின் சிற்பம் பொறித்திருக்கும்.

### போதிகை

குடவரைக் கோயில்கள் தூண்களின் மேலேயுள்ள பத்மவடிவிலான போதிகை சிலவற்றில் அரைவட்டமாக வளைந்தும் சிலவற்றில் வளைவில்லாமலும் இருக்கும்.

### கூடு

கோயில் கட்டிடத்தில் கூடு எனப்படும் ஒரு பகுதியுண்டு. கூடுகள் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு விதமான சித்திர அமைப்புடன் காணப்படுகின்றன. மகேந்திரவர்மன் குடவரைக் கோயில்கள் சிலவற்றில் கூடுகளும் காணப்படுகின்றன. அந்த கூடுகளின் அமைப்பைக்கொண்டும் அந்த குகைக்கோயில்கள் மகேந்திரவர்மன் காலத்தவை என்பதை அறியலாம். மனிதன் தலை உருவம் அமைக்கப்பட்டிருக்கும்.

### துவாரபாலகர்

மகேந்திரவர்மன் காலத்துக் குடவரைக் கோயில்களில் உள்ள துவாரபாலகர் உருவங்கள் எல்லாம் எதிர்நோக்கி நிற்பது போல அமைந்துள்ளன. பக்கவாட்டமாகத் திரும்பியும் திரும்பியில்லாமலும் இவை பெரிய பளுவான தண்டாயுதத்தைத் தரையில் ஊன்றி அதன்மேல் கைகளைத் தாங்கி நிற்கும் சில குகைக்கோயில்களில் துவாரபாலகர் கையைத் தலைக்குமேல் உயர்த்தியிருப்பது போல அமைந்திருக்கும். சில துவாரபாலகரின் தலையில் இரண்டு மாட்டுக் கொம்புகளை அணிந்திருப்பதுபோலச் சிற்பங்கள் காணப்படுகின்றன. மகேந்திரவர்மன் காலத்துத் துவாரபாலகர் இரண்டு கைகளையும் மட்டும் உடையவர்கள். சில துவாரபாலகர்கள் ஒரு காலை ஊன்றி மற்றொரு காலைக் குறுக்காக மடக்கி நிற்பர்.

### மகர தோரணம்

மகேந்திரவர்மன் குடவரைக் கோயிலுள்ள மகரதோரணங்கள் அல்லது திருவாட்சிகள் இரண்டு வளைவுள்ளனவாக இருக்கும். ஒரேவளைவு உள்ளதாக இருக்காது. மகேந்திரவர்மன் காலத்து மகரதோரணம் இரண்டு வளைவாக இருப்பது காணப்படுகின்றது. இந்தச் சிற்ப வேலைப்பாடுகள் அமைப்பு முறையை வைத்து மகேந்திரவர்மன் காலத்து குடவரைகள் எனக் கருதலாம்.

### குடவரைக் கோயில்கள் சிற்ப அழகியல்

கலைப்புலச் செயல்பாட்டில் அழகியல் கோட்பாடு தவிர்க்க இயலாததுஒன்று. மனம்கவர் நுகர்ச்சி வழியாகச் சிந்தனைக்குள்ளும் உணர்னுக்குள்ளும் உருவாகும் ரசனைச் செயற்தளம் எனலாம். பிரிட்டானிக்கா கலைக்களஞ்சியம் அழகியல் அழகின் தத்துவார்த்த கோணம் குறித்து ஆராய்வு என்றும் இது கலையின் தத்துவார்த்த பார்வைக் குறித்த கோட்பாடு எனவும் வரையறுக்கிறது. கலையின் பல்லவர்கால சிற்பங்களில் வெளிப்படுத்தும் அழகிய கோட்பாடாக கருதலாம்.

### முடிவுரை

பல்லவர் காலம் கொண்டுவந்த புதிய பொருளாதார செயல்பாடு அவை உருவாக்கிய சமூக மாற்றம் அதனூடாக உற்பத்தி செய்யப்பட்ட சமய மறுமலர்ச்சிக்கான சமய இயங்கங்கள், அதன் உந்துதலின் காரணமாக உருவான குடவரைக் கோயில்கள் அதன் அமைவிடம் அமைப்பு முறை சிற்ப ஒற்றுமை நுணுக்கங்களும் குடவரை கோயில் குறித்த ஆவணமாக மட்டுமல்லாமல் அக்கோயில்களுக்கு தத்துவார்த்த கோணத்தையும் வழங்குகிறது.

மகேந்திரவர்மப் பல்லவன் காலப் பொருளாதாரத்தை எழுச்சிப் பொருளாதார நிலை என வரையறுத்தால் அதன் தாக்கத்தைக் கலையிலும் காண இயலும். குடவரைக் கோயில் அமைப்பு முறை சிற்பக்கூறுகள் கட்டடக்கலை இதன்வழி பல்லவர்கால உள்ளார்ந்த கலை அழகியலை இக்கட்டுரை எடுத்து விளக்குகிறது. குடவரை என்ற புதிய கோயில் கட்டுமான வடிவத்தை கொண்டுவந்த மகேந்திரவர்மன் பல்லவர்களின்

சமூக வகிபாகம் அடுத்தத் தலைமுறை ஆய்வாளர்களுக்கு மேலாய்வுக்களமாக உள்ளது.



**மாமண்டூர் குடைவரைக் கோயில் எண்பட்டை வடிவத் தூண்கள்**



**மாமண்டூர் குடைவரைக்கோயில் முற்றுபெறாத தூண்கள்**

**சான்றாதரங்கள்**

1. மயிலை. சீனி. வேங்கடசாமி, மகேந்திரவர்மன், பூம்புகார் பதிப்பகம், சென்னை, 2008. ப 22, 92
2. கே.மீனாட்சி, பல்லவர்கள் கீழ் நிர்வாகம் மற்றும் சமூக வாழ்க்கை மெட்ராஸ் பல்கலைக்கழகம், 1938, ப.1
3. கே.ஆர்.ஸ்ரீனிவாசன், பல்லவர்களின் குகைக் கோயில்கள், இந்திய தொல்லியல் துறை, 1964. ப.34
4. நெடுநெல்வாடை சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், ப.3, சென்னை 2003
5. பர்டன் ஸ்டெய்ன் - இந்தியாவின் வரலாறு, ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக அச்சகம், 2000. ப.21
6. G. Jouveau & Dubrauil பல்லவர்கள், பாண்டிச்சேரி, Dumma St, 1917. ப.68
7. மா.இராசமாணிக்கனார், பல்லவர் காலம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை. 2022. ப.54, 219, 220
8. தொ.பரமசிவன், தெய்வம் என்பதோர், காலச்சுவடு பதிப்பகம், 2018.